**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.733/2023**
**வழக்கு சாட்சி PW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பெருமாள் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஆச்சிமுத்து | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | வல்லக்குளம் | வயது | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 27th, 2026.

**(2ம் எதிரி ஆஜர். 1,3 ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி மாவட்டம், மாவட்ட குற்றப்பிரிவு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு 25.05.2018 அன்று சுரண்டை வட்ட காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்தபோது, ஆலங்குளம் காவல்நிலையத்தில் கூடுதல் பொறுப்பில் இருந்தேன். அன்றைய தினம் ஆலங்குளம் காவல் நிலைய குற்றஎண்.305/2018, சட்டப்பிரிவுகள் 294(பி), 353, 307, 506(2) இதச வழக்கின் முதல் தகவல்அறிக்கையை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

வழக்கின் சம்பவயிடமான ஆலங்குளம் புதிய பேருந்துநிலையம் அருகே காமராஜர் சிலையின் முன்பு அன்றைய தினம் 13.00 மணிக்கு சென்று சாட்சிகள் ரவி மற்றும் சாமுவேல் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர்

**அ.சா.ஆ.5** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6** ஆகும். பின்பு சாட்சிகள் காவல் உதவி ஆய்வாளர் முகைதீன் அப்துல்காதர், சிறப்பு உதவி காவல் ஆய்வாளர் மாரியப்பன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு எதிரிகளை தேடி அம்பாசமுத்திரம் ரோடு, திருநெல்வேலி ரோடுகளில் தேடிச்செல்லும் போது எதிரிகள் ராமர்கோவில் அருகே பதுங்கி இருந்தனர். அவர்களை காரணம் கூறி கைது செய்து, குற்றத்தை பற்றி விசாரிக்க எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். பின்பு சாட்சிகள் முதல்நிலைக்காவலர் பாரதிதாசன், கிருஷ்ணகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் 1, 2 எதிரிகள் சம்பவத்திற்கு பயன்படுத்திய அரிவாள்களை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். பின்பு எதிரிகள் மற்றும் சொத்துக்கள் சகிதம் 18.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்தேன். எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.7.** அரிவாள்கள் – 2 எண்ணம் – **அ.சா.பொ.1** வரிசை ஆகும்.

பின்பு சாட்சிகள் முதல்நிலைக்காவலர் ஜெயபாலகிருஷ்ணன், ஆனந்தராஜ், முருகேசன், சரவணன், சக்திவேல், முதல்நிலைக்காவலர் பாரதிதாசன், கிருஷ்ணகுமார், முதல்தகவல்அறிக்கை பதிவு செய்த உதவி காவல் ஆய்வாளர் சுதாகரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 11.06.2018அன்று சாட்சிகளின் விசாரணைகளிலிருந்தும், எனது புலன் விசாரணையிலிருந்தும் சம்பவநாளில், சம்பவயிடத்தில், சம்பவநேரத்தில் சம்பவம் உண்மையென தெரிய வந்ததினால் 1 மற்றும் 2வது எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 353, 307, 506(2) இதச–வின் படியும், 3வது எதிரியின் மீது சட்டப்பிரிவுகள்

294(பி), 353, 506(2) இதசவின் படியும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.28 16:32:48 +0530